# 1. இன்னும் கண்டுகொள்ளப்படாத நாடுகள்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது உண்மையாயின் உலகெங்கும் வாழும் நம் கேளிரையும் அவர்கள் வாழ்விடச் சிறப்புகளையும் அறிந்துகொள்ள வேண்டாமா?

நம் கேளிர் 692 கோடி பேர், இறையாண்மையுள்ள, 195 தனி நாடுகளில் வாழ்கின்றனர். (07.01.2011 கணக்கின்படி உலக மக்கட்தொகை 6,928,198,258)

இப்படியும் ஒரு நாடா? இப்படியெல்லாம் வாழும் மக்களா?இங்கு இத்தனை விந்தைகளா? என்று நம் புருவங்களை உயர்த்த வைக்கும் அரிய தகவல்கள் பல பூமியின் மேனியெங்கும் கொட்டிக்கிடக்கின்றன. அறிந்த நாடாயினும் அவற்றில் இன்னும் அறியப்பட்டாத செய்திகள் பல உள்ளன. இப்படி நம்மால் இன்னும் கண்டுகொள்ளப்படாத நாடுகளை இத்தொடர்வழி மானசீகமாகக் கண்குளிரக் கண்டுகளிப்போம்.

இந்த 195 நாடுகளில் வத்திக்கான், தாய்வான், கொசோவா ஆகிய மூன்று நாடுகள் தவிர பிற 192 நாடுகள் ஐநா சபையில் அங்கம் வகிக்கின்றன.




புதிதாகப்பிறந்தகோசோவோ

கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் 33 புதிய நாடுகள் மலர்ந்துள்ளன. 1991 இல் சோவியத் ஒன்றியத்தின் இரும்புத்திரை நொறுங்கி, ரஷ்யாவைத் தவிர இன்னும் 15 நாடுகளாகச் சிதறியது.

சோவியத் சிதறல் தென்கிழக்கு ஐரோப்பாவிலும் எதிரொலித்தது. 1992 இல்

யூகோஸ்லோவியா மறைந்து அங்கே 5 புதிய நாடுகள் பிறந்தன. அப்படிப் பிரிந்த 5 நாடுகளில் ஒட்டிப்பிறந்த இரட்டைக்குழந்தைகள்போல இருந்த செர்பியா மற்றும் மாண்டேனேக்ரா என்ற நாடு இரு தனி நாடுகளாக 2006 இல் கத்தரிக்கப்பட்டது. 2008இல் மீண்டும் செர்பியாவிலிருந்து கருத்துவேறுபட்டு கொசோவோ என்ற நாடு பிறந்தது. இதுவே இன்றைய கடைசிப் புது நாடு.



கோசோவோவை அங்கீகரித்த உலக நாடுகள்

1993-இல் செக்கோஸ்லோவாக்கியா, செக் குடியரசு, ஸ்லோவாக்கியா என இரு தனிநாடாகப் பிளந்தது.



கோசோவோ தலைநகர் பிரெஸ்டீனா

ஆசியா கண்டத்தில் இந்தோனேசியாவிலிருந்து 2002- இல் விடுதலைபெற்று கிழக்குத் திமோர் தனிநாடானது.

ஆப்பிரிக்கக்கண்டத்தில் 1993-இல் எத்தியோப்பியாவிலிருந்து எரித்திரியா என்ற புதுநாடு பிறந்தது. 1990-லேயே தென்னாப்பிரிக்காவிலிருந்து நமீபியா பிரிந்து தனிக்குடித்தனம் சென்றது.

பசிபிக் பெருங்கடலில் 1991-இல் மார்ஷல் தீவுகளும், மைக்கிரோனேசியா என்ற புதுப்பெயர் சூடிய காரலைன் தீவும், 1994 இல் பாலாவு தீவும், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக்கொண்டு தனித்தீவு நாடுகளாய் சுதந்திரமாக மிதந்தன.




பசிபிக் தீவுகள்

நாடுகள் பிரிந்தது ஒரு புறம் இருக்க, பிரிந்த நாடுகள் 1990-இல் இணையவும் செய்தன. வடக்கு, தெற்கு ஏமன்கள் ஒரே ஏமனாயிற்று. கிழக்கு ஜெர்மனியில் இரும்புத்திரை கிழிந்து மேற்கு ஜெர்மனியுடன் இணைந்து ஒரே ஜெர்மனி பிறந்தது.



மைக்கிரோனேசியா

இப்படி உலகில் 1990-க்குப்பிறகு இரத்தம் சிந்தியும், அமைதியான ஒப்பந்தங்களாலும் 33 புதிய நாடுகள் உதயமாகியும், தமிழ் ஈழம் மட்டும் மலர முடியவில்லையே

உலகில் 17 குட்டித் தனி நாடுகள் உள்ளன. அவை அனைத்தையும் ஒன்றிணைத்தால் சிங்கப்பூருக்குள் அடக்கி விட்டாலும் இடம் மிஞ்சும். அந்தச்சின்னஞ்சிறு அதிசயங்களைப் பற்றி அடுத்துப் பார்ப்போம். (*வெற்றி வேந்தன்: ஆகஸ்டு* 2015)